1164

புராணிகர், கலாநிதி

திரு. இ. நெல்லையசாமி பாண்டியர்

அவர்கள்

# அன்பளிப்பு

1114
(6391)

உ.

சிவமயம்.

# சன்மார்க்கம்

---

"முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே
யந்நெறியே சென்றங் கடைந்தவர்க்கெல்லா
நன்னெறியாவது நமச்சிவாயவே"

சத், மார்க்கம், என விரண்டுபதங்கள் சேர்ந்து சன்மார்க்கம் எனநிற்கும். இச்சொல் சத்துக்கு மார்க்கம், என விரிந்து, சத்துப்பொருளை யடையுமார்க்கம், எனவும் பொருள்தரும். என்பவே, சத்துப்பொருள் யாது? அதனை யடையும் பொருள் யாது? யாண்டு நின்றும் அடைய வேண்டுவது? என்பதே, நாம் முதற் கண் ஆராய்ச்சி செய்யக் கிடப்பது. என்றைக்கு முள்ள பொருள் எது? அதுவே சத்துப்பொருள். இதனையே "பண்டு மின்று மென்று முள்ளபொருளென்று பல்லாண்டு கூறுதுமே", என விளக்கியதும். இப்பொருள், என்றும் ஒருபடித் தாயிருக்கும் பொருள். இதற்கு, ஒடுக்கந் தோற்ற மென்பதில்லை. இதுவே முழுமுதற் கடவுளாகிய சிவப்

பொருள். இச்சிவத்தையே பிதன்றலைப்புத் தேவாரச்சுருதியில் 'முதல்வன்' 'முக்கண்ணன்' என்றுகூறியது. இது போலன்றி, உலகப்பொருள் களாகிய, ஏனைப்பொருள்கள், ஒடுங்கியும், மீளத்தோன்றியும், அவ்வாறே மாறி மாறித் தொழிற்பட்டும் வரும். இக்கருத்தினையே நமது ஆசாரிய சுவாமிகள் "தோற்ற முண்டேல் மரணமுண்டு" என்றருளிச்செய்ததும். இவ்வுலகப் பொருள்கள் காரணரூபத்தில், என்று முள்ளவைகளே யாயினும், ஒருகாலத்துக் காரிய ரூபமாக வெளிப்பட்டுத் தோன்றும். காலம் வந்துழிக் காரணரூபமாக மறைந்தும் போம். ஆதலால் இவைகள் அசத்தெனவும், அநித்திய மெனவுங் கூறப்படும். ஜீவர்களாகிய நமக்குத் தனித்து நிற்குமியல்பு என்றுமில்லை. அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்போம். அவைகளை விட்டு நீங்கியதும், சத்துப்பொருளைச் சார்ந்து நிற்போம். அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்கும்போது அவற்றினியல்பாகிய தோற்ற வொடுக்கம், நம்மாட்டுங் காணப்படும். அவற்றை விட்டு நீங்கிச்சத்துப் பொருளைச் சார்ந்ததும், அவற்றினியல்பாகிய, என்று மொருபடித்தாயிருக்குந்தன்மை, நம்மாட்டுங் காணப்படும். ஒருகாலத்துச்சத்தினியல்பும், ஒருகாலத்து, அசத்தினியல்பும், நம்மாட்டுக்காணப் படுதலால், நாம் சதசத்தெனப் படுவோம். சதசத்துப் பொருள்களாகிய நாம், அசத்துப் பொருள்களைச்சார்ந்து நிற்ப தொழிந்து, சத்துப்பொருளாகிய சிவப்பொருளையுடைய மார்க்கமே, சன்மார்க்கமாம். இம்மார்க்

தந்நிலையே நமது ஆசாரிய சுவாமிகள் 'முன்னெறி' யென்றும், "முதல்வன் முக்கண்ணன் றன்னெறி" யென்றும் அருளிச்செய்தனர். இச்சன்மார்க்கமே, இன்று சம்பாஷணைக்கு எடுத்துக் கொண்ட விஷயம்.

சத்துப்பொருளை யடைவது, சன்மார்க்கமெனக் கூறினோம். அதனையடைய வேண்டுவதேன்? கூறுதும். ஜீவர்களாகிய நாம், சுகத்தையே விரும்புகிறோம். அச்சுகமும், என்றும் நிலைத்து நிற்க விரும்புகிறோம். அசத்துப் பொருள்களால் வருஞ்சுகம், அத்தன்மைத்தல்ல. அவைகளே துக்கத்திற்குங் காரணமாகின்றன. மனைவி மக்களாதி சுற்றத்தாரால் நமக்கு வருஞ்சுகமுமுண்டு. அவர்களால் நமக்கு வருந்துக்கமு முண்டு. மாடமாளிகையாதி ஐஸ்வரியங்களால் நமக்கு வருஞ்சுகமுமுண்டு. அவைகளால் நமக்கு வருந்துக்கமு முண்டு. "இன்பமுண்டேற் றுன்பமுண்டு, ஏழைமனை வாழ்க்கை" என்றார் நமது ஆசாரிய சுவாமிகள். இவ்வசத்துப் பொருள்களால் வருஞ்சுகத்தினுந்துக்கமே மிகுந்து நிற்கும். அச்சுகமும் என்றும் நிலைத்தவாறில்லை சிறிதுகாலஞ் சுகத்தைத்தந்து வந்த மனைவிமக்கள், அதனைத்தாராதே யொழியினு மொழிவர். மாறித் துக்கத்தையே தரினுந்தருவர். ஏனைப்பொருள்களுமப்படியே. அன்றியும், அப்பொருள்கள் ஒடுங்கிப் போங்காலத்தில், அவைகளால் வருஞ் சுகமுமின்றாம். அவ்வாறொடுங்குவது மின்னகாலத்தென்பதுமில்லை. நீண்டகாலம் ஒரு பொருள் நிற்குமென வெண்ணுகிறோம், கணப்பொழுதிலின்றாகின்றது. நல்ல

விருக்ஷத்தை யுண்டுபண்ணி யதன் கனியை யுண்டு சுகிக்க, நீண்ட காலமாய், ஒருவன் எண்ணியிருக்கிறான். திடீரென ஓர் சுழற்காற்று அதனை வீழ்த்துகின்றது. நல்லபுதல்வனைப் பெற்று, இவன்றனக்கு நல்ல சுகத்தை தருவானென எதிர் பார்த்து நிற்கிறான், அவனாற்சுகங்கிடைக்குந் தருணத்தில், இவ்வுலக வாழ்க்கையினின்றும் நீங்குகின்றான்.

"உண்டுபோலின்றாமுலகைத் திரமெனவுட்
கொண்டுநான் பெற்ற பலன் கூறாய் பராபரமே"

என்றிரங்கினார் நமது தாயுமான சுவாமிகளும். நாங்கூறி வரும் ஸ்திரமின்மை, யிவ்வுலகப் பொருள்கட்கு மாத்திர மன்று. மறுவுலகவாழ்க்கையு மிவ்வாறே. ஆண்டுள்ள இந்தி ராதி பதங்களுமிவ்வாறே. அவைகளும் ஸ்திரமல்ல. அவை கட்குமழிவுண்டு.

"நூறுகோடி பிரமர்க ணொந்தினார்
ஆறுகோடி நாராயண ரங்கனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாதவன் ஈசனொருவனே"

என்றருளிச் செய்தனர், நமது அப்பர் சுவாமிகளும். ஆத லால், இவ்வுலகத்திலேனும் மறுவுலகத்திலேனு முள்ள அசத்துப்பொருள்களால்வருஞ்சுகத்தில், நமக்குத் திருப்தி யென்பதே யில்லை. தனித்த சுகத்தையே, துக்கம் விரவாத சுயம்பு சுகத்தையே, என்றும் நிலைத்து நிற்குஞ் சுகத் தையே, நாம் எந்நாளும் பெற விரும்புகின்றோம்.

" துக்க மிக்க வாழ்க்கையின்சோர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச்சார்தல் செய்யப்போதுமின்"
என்ற தமிழ்வேதச் சுருதியின் கருத்து மிதுவே.

அத்தன்மைத்தான சுகத்தை தரும்பொருள், சத்துப் பொரு ளொன்றே. அதற்கு மலமாயா கன்மங்களின், தொடர் பின்று. அதனைச் சார்ந்தார்க்கு மஃதின்றும். அதற்கு, அவற்றால் வருஞ் சுக துக்கங்களின்றும். அதனைச் சார்ந்தார்க்கு மின்றும். அதன்பாலுள்ள சுகம், அருளால் விளையுஞ் சுகம். அது பரமானந்த சுகம். " சித்தத்துள் தித்திக்குந் தேன் " அச்சுகம். உலகிற் கிடைக்கு மெவ்வகைச் சுகங்களிலு மிகவினியது. அதனையே,

" கனியிலுங் கட்டிபட்ட கரும்பிலும்
பனி மலர்க்குழற் பாவை நல்லாரிலும்
தனிமுடி கவித்தாளு மரசிலு
மினியன்றன் னடைந்தார்க்கிடை மருதனே"

எனக்கூறுந் தமிழ்வேதம். அதனால் வருஞ்சுகம், நிறைந்த சுகம் "ஆனந்த பூர்த்தி" யதுவே. அச்சுகத்திற் கோரளவில்லை. அது " சுகவாரி". அதனுட் படிந்தார் சுகக்கடலில் மூழ்கினோராவர். அப்பொருட்டு அழிவென்பதே யில்லை. அதனால் வருஞ் சுகத்திற்கும், அஃதின்றும். அதற்குத் தேய்தல் வளர்தலில்லை. அதனால் வருஞ்சுகத்திற்கு மஃதில்லை. தன்பாலுள்ள சுகத்தைத் தன்னையடைந்தார்க்குதவும்

வன்மை யதற்குண்டு அன்பையே தனக்கு வடிவமாயுடையது. அதுவே தனது சத்தி.

" அன்புஞ் சிவமுமிரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிகிலர்"

என்பது திருமந்திரம். இதனையன்றி, சீவர்களாகிய நமக்கு நித்திய சுகத்தைக் கொடுப்பது வேறெது?. இச்சுகத்தைப் பெறுதற்கன்றோ,

" பத்தருந்து பரமசுகம் யானருந்த
எத்தனைநாட் செல்லுமியம்பாய் பராபரமே"

என்று பரிந்திரங்கினர் நமது தாயுமான சுவாமிகளும். பிரமன் அன்ன வடிவாய் மேனோக்கிச் சென்றதும், விண்டு வராகவடிவாய்க் கீழ்நோக்கிச் சென்றதும், இச்சுகம் பெறுதற்கன்றோ. இக்கருத்தினையே, ஸ்ரீவாசகப் பெருமான்

" ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்"

என்றதும், நமதுதாயுமான சுவாமிகள்

" தேடினேன் றிக்கனைத்துந் தெண் டனிட்டேன்
சிந்தைநைந்து
வாடினேனென்மயக்க மாற்றாய் பராபரமே"

என்றதும். இத்தன்மைத்தான சத்துப்பொருளைத் தேடியடையு மார்க்க மன்றோ உண்மைச் சன்மார்க்கம். இம் மார்க்கமன்றோ துன்பக்கடலில் மூழ்கி வருந்துவார்க்குப் புகலிடமாய் நிற்பது.

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே" என்று இதன் றலைப்புச் சுருதியிற் கூறியது மிம்மார்க்கத்தையே.

சத்துப்பொருளொன்றே நித்தியானந்த சுகப்பொருளென்பது பொருந்தும். அது சிவப்பொருள். ஒன்றேயென்பதென்னை? சத்துப் பொருள் தவிர, வனையெல்லாப் பொருள்கட்கும், ஒடுக்கந்தோற்றமுண்டெனக்கூறினோம். அப்பொருள்கள், தனித்தனி வெவ்வேறு காலங்களில் ஒடுங்குவதோடு, அவை யாவும், ஒருங்கே யொடுங்குங் காலமும் என்றாயினும் வரும். அக்காலம் வந்துழி, சர்வ சம்மார கிருத்தியத்தை நேர்நின்றியற்றும் பொருள் ஒன்றே யொடுங்காது நிற்கும். அக்காலைத்துப் பிறபொருளில்லையாதலால், அவற்றைத் தானதிட்டித்து நின்று சம்ஹாரம் நடத்துவதென்பது மின்றாம். நேர்நின்று சர்வ சம்ஹாரம் நடத்தும் பொருளே, தானொடுக்கிய பொருள்களை மீளவும் தோற்றுவிக்கும். என்பவே, இச்சர்வ சம்ஹார கிருத்தியத்தை நேர்நின்று நடத்துதற்குரிய பொருள் யாதோ, அதுவே சத்துப்பொருளாம். சிவப்பொருளன்றி, பிரம விட்டுணு முதலிய வேனைப்பொருள்களிலொன்றற் கேனும் மவ்வாறியற்று முரிமையாண்டுங் கேட்கப்படவில்லை. சிவப்பொருளொன்றற்கே யவ்வுரிமை யுளதென, எல்லாச் சுருதிகளுங் கூறும். அதுவே நித்தியமாயுள்ள பொருள், அதுவே நித்தியானந்த பரமசுகத்தைத்தரும் பொருள்.

அச்சிவப்பொருளையடைய வேண்டுமெனில், அது

தான் யாண்டுள்ளது? இவ்வுலகத்திலா? மறுவுலகத்திலா? இன்னவுலகத்தென்பது மில்லை, இன்ன விடத்தென்பது மில்லை. எல்லாவுலகத்திலு மெல்லா விடத்திலு முள்ளது. “பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்த” மாயுள்ளது, அவ்வாறுளதேல் அதனையடைவதென்பதென்னை? அது எங்குமிருப்பினும், அதன்பால் நம்மறிவிச்சை செயல்கள் நிலைத்து நிற்பதில்லை. அவையாவும் அசத்துப் பொருள்களின்பாலே நிலைபேறுடையன. அசத்தினையேயறிகிறோம். அதனையேயிச்சிக்கிறோம். அதன்பாலே நஞ்செயல் நிகழும்நமதறிவிச்சைசெயல்கள் அசத்தின்பால் முற்றும் நிகழும்போது சத்தின்பால் ஒரு சிறிதும் நிகழ்தலில்லை. அவ்வறிவிச்சை செயல்களைச் சத்தின்பாற் செலுத்துதலே யதனையடையு மார்க்கம். இதுவே சன்மார்க்கம்.

ஒரு பொருளின்பால், அறிவிச்சை செயல்களை நிறுத்துதலேயதனை யடைதலென்றோம். ஜீவர்கட்கும், அறிவிச்சை செயல்களுண்டேல், அவைகள் சத்தின்பாற் சாராது நிற்பதென்னை? ஜீவர்களாகிய நமக்கு அறிவிச்சை செயல்களியற்கையே யுண்டு. ஆனால் ஏகதேசப் பட்டவைகளே. ஒருகாலத்து, ஒன்றனையே யறிகிறோம், ஒன்றனையே யிச்சிக்கிறோம், ஒன்றனையே செய்கிறோம். எல்லாப் பொருள்களையு மொருங்கே யறிந்து, ஒருங்கே யிச்சித்து, எல்லாச் செயல்களையு மொருங்கே செய்யும், வியாபக அறிவிச்சை செயல்கள் நமக்கென்று மில்லை. அவைகள் சிவப்பொருளொன்றற்கே யெந்நாளுமுள. அன்றியும், அச்சிவப்பொருளின்

அறிவிச்சை செயல்கட்கு எக்காலமும் நிகழ்ச்சி யுண்டு. அதுபோலன்றி ஜீவர்களினறிவிச்சை செயல்கள், துவக்கத்தில், ஆணவமலத்தாற்றடைப்பட்டு யாதொரு நிகழ்ச்சியுமின்றிக் கிடந்தன. அந்தடை நீங்கினாலன்றி, யவ்வறிவிச்சை செயல்கள், சத்தின்பாற்சாரா. அத்தடை நீக்குதற்கென்றே சத்தாகிய சிவப்பொருள், மாயையினின்றுந் தநுகரணாதிகளைச் சிருட்டித்து ஜீவர்கட்குக் கூட்டுவிக்கும். கூட்டுவிக்கவும், அந்நிகழ்ச்சி சத்தின்பாற் செல்லாதாயினும், கூட்டுவிக்கப்பட்ட தநுகரணாதிகளாகிய அசத்துப் பொருள்களின்பாற் செல்வதாகும். அவ்வசத்துப் பொருள்களே, ஜீவர்களைப் பந்தித்துள்ள மலத்தைக் கழுவுமருந்தாம். ஆடையிற் படிந்துள்ள அழுக்கைப் பலவகை யுவர் மண்ணாலும் பலகாற் கழுவுகிறோம். அதுபோல், ஜீவர்களைப் பந்தித்துள்ள ஆணவ மலமும், மாயாமலத்தினின்றுண்டாக்கப்பட்ட பலவகைத் தநுகரணாதிகளாற் பலகாற்கழுவப்படல் வேண்டும். உவர் மண்ணாற் கழுவுந்தோறும் கழுவுந்தோறும் ஆடையினழுக்குச் சிறிது சிறிதாய் நீங்கும். அவ்வழுக்கு முற்றும் நீங்கியவழி யவ்வாடை சுத்த வெண்மையையடையும். அதுபோலப் பலவகைத் தநுகரணாதிகளோடு, ஜீவர்களைக் கூட்டிப் பிரிக்குந்தோறும் அவர்களைப் பந்தித்துள்ள ஆணவ மலமுஞ் சிறிது சிறிதாய் நீங்கும். அம்மலம் முற்றும் நீங்கவே, ஜீவனும், தன்னைப் பந்தித்துள்ள தடையினின்று முற்றும்நீங்குவானவான். அவனறிவிச்சை செயல்களும்,

நித்தியானந்த சுகவடிவாயுள்ள, சிவப் பொருளின்பால், தானே சார்வதாகும்.

"பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தாற் பசுக்கள், தலைவனைப் பற்றிவிடாவே" என்னுந் திருமந்திரத்தின் கருத்து மிதுவே.

அசத்துப் பொருள்களின் பால், நமது அறிவிச்சை செயல்களைச் செலுத்துதலே, அவற்றைச் சத்தின் பாற் செலுத்துதற் குரிய உபாயமா மென்றனம். அசத்துப் பொருள்கள்தான் யாவை? அவற்றை யடைந்து சத்துப் பொருளை யடைதல், எங்ஙனம்? கூறுதும். இவ்வுலகிலும், ஏனை யிந்திராதி தேவருலகிலும் நமக்கு எவ்வகைப் போகங்களையுங் கொடுக்குஞ் சகல பொருள்களும், அசத்துப் பொருள்களே.

"மண்டனில் வாழ்வும் வானத்தரசயன் மாலார்வாழ்வு
மெண்டரு பூதபேத யோனிகளியாவு மெல்லாங்
கண்ட விந்திரமா சாலங்களுக் கழுதிரதங்காட்டி
யுண்டுபோலின்றும் பண்பிலுலகினை யசத்துமென்பர்"

என்று நமது சந்தான குரவர் சுவாமிகள் கூறியபடி, யிவ்வுலக பதங்களும் ஏனையிந்திராதி பதங்களும், அசத்துப் பொருள்களே. அவைகளை யடையு மார்க்கமும், அசத்து மார்க்கமாம். இதுவன்றிச் சத்துப் பொருளை யடையு மார்க்கம், சத்துமார்க்கம், அல்லது சன்மார்க்கமென நிற்கும். இம்மார்க்கத்திற்கு அசத்து மார்க்கமே மார்க்க

மாம். அஃதாவது இச்சன்மார்க்கத்திற்கு ஏனையார்க்கங் களியாவுஞ் சோபான மார்க்கங்களாம். அச்சோபானமார்க் கத்திற் சென்றன்றி, யிச்சன்மார்க்கத்திற் செல்லுதல் கூடாதாகும். எதுபோலெனில், கூறுவாம். வாரணாசியிற் போய், விசுவேசரைத் தரிசிக்கவிரும்பிய ஒருவன், இடை யிலுள்ள, ஏனைப் பட்டினங்களிற் சென்றே யவ்வாரணாசி சேரல் வேண்டும். அப்பட்டினங்களை யுத்தேசமாய், மத ராஸ், பம்பாய் முதலிய ஆறு என்றுகொள்வோம். புறப் பட்ட தலத்தினின்றும், மதராஸ் சேருமளவும், மதராஸ் மார்க்கத்திற் செல்வான், அப்பால் பம்பாய் மார்க்கத்திற் செல்வான். இவ்வாறே சென்று முடிவில் வாரணாசி மார்க் கத்திற் செல்வான். ஏனை மார்க்கங்களிற் சென்றன்றி யிவ்வாரணாசி மார்க்கத்திற் செல்லுதல் கூடாது. இவ்வார ணாசி மார்க்கத்திற்கு ஏனையாறுமார்க்கங்களும், சோபான மார்க்கங்களாம். சன்மார்க்கத்திற்கு, ஏனையறுவகைச்சம யங்களு மித்தன்மைத்தேயாம்.

“நெறிகள் தாம்பல பலவு மாயந்த நெறிக்காஞ் செறியுந் தெய்வமும் பலபல” என்று தாயுமானசுவா மிகள் கூறியபடி மார்க்கங்கள் பலவேயாக, அவற்றுள் சத்து ப்பொருளாகிய சிவத்தை யடையுமார்க்க மிதுதானென்று கண்டு கொள்வ தெங்ஙனம்? முன்னரே, சன்மார்க்கம், ஏனை மார்க்கங்களோடு முரணாது, அவற்றைத் தனக்குச்சோபான மார்க்கங்களாகக் கொண்டு நிற்குமெனக் காட்டினோம். இக் கருத்தினை யுட்கொண்டே அருணந்தி சிவாசாரியரும்,

"இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி நீதியினு
ளிவையெல்லா மோரிடத்தே காண நின்றதி
யாதொரு சமயம், அது சமயம்" என்று உண்மைச் சன்மார்க்கத்தை யுணர்ந்து கொள்ளும், உபாயத்தையும் விளக்கினார். இவ்வுபாயத்தைக் கடைப் பிடித்தார்க்குச் சன்மார்க்க மின்னதென, வெள்ளிடை மலைபோல் விளங்கும். வேதம், சிவாகமம், இரண்டினையும், முதனூல்களைக்கொள்ளும் மார்க்கம், எந்தமார்க்கம்? முதல்வனது வடிவம், உருவமே யென்னாமலும், அருவமே யென்னாமலும், அருவும், உருவும், அருவுருவுமெனக் கூறுமார்க்கம், எந்தமார்க்கம்? முதல்வன் சகுணனே யென்னாமலும், நிர்க்குணனே யென்னாமலும், குணமுள னென்றும், குணமில னென்றுங் கூறுமார்க்கம், எந்தமார்க்கம்? முதல்வனும், ஜீவனும் ஒன்றே யென்னாமலும், இரண்டே யென்னாமலும், என்று மிரண்டு மின்றென்னாமலும், இரண்டற நிற்கும், உண்மை நிலையை யுணர்த்தும் மார்க்கம் எந்த மார்க்கம்? அந்தமார்க்கம், சைவமார்க்கமே. அதுவே யுண்மை மார்க்கமாகும். அதுவே ஒரேசத்துப் பொருளாகிய சிவப் பொருளின்பாற் சேர்க்குமார்க்கம். அதுவே சன்மார்க்கம். இச்சன்மார்க்க நெறி நின்றுரையே,

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே
யன்னெறியே சென்றங் கடைந்தவர்க்கெல்லாம்" எனச் சுருதி கூறியதும்.

சைவ மார்க்கத்தினைச் சன்மார்க்க மெனக் கூறினோம். இனியதன் சோபான மார்க்கங்கள் தாம் யாவை? என்பதைப் பரியாலோசிப்பாம். உலகிலுள்ள எல்லா மார்க்கங்களு மிதன் சோபான மார்க்கங்களாம். இப்போதுலகிலுள்ள மார்க்கங்கள் மாத்திரமல்ல இனி யுண்டாகு மார்க்கங்களு மிவ்வாறே.

"விரிவிலா வறிவினாரும் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்"

என்றார் நமதாசாரிய சுவாமிகளும். வேத சிவாகமங்களிரண்டினுக்கும் புறம்பாயுள்ள, கிறிஸ்துவ மகம்மதிய மார்க்கங்களுள்பட உலோகாயுதாதி மார்க்கங்களியாவு மிதன் சோபான மார்க்கங்களே. வேதங்களின் கன்ம காண்டத்தை மாத்திரமேற் கொண்ட மீமாம்சாதி மார்க்கங்களும், அதிற்கூறிய விதிவிலக்குகளைப்பற்றி நின்று, ஜாதிபேதம், ஆச்சிரம பேத முதலியவைகளைக் கூறும் ஸ்மிருதியாதி மார்க்கங்களும், வேதசாரங்களைக் கதாரூபமாக விரித்துரைக்கும் பௌராணிகமார்க்கமுமிவ்வகுப்பினவே. வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களை யதன் கன்மகாண்டத்தோடு மேற்கொண்டு, அவ்வுபநிடதார்த்தங்களையெல்லாம், மிகத்தெளிந் துணர்த்துதலாகிய வேதாந்த மார்க்கமும் இம்மார்க்கத்திற்குச் சோபானமார்க்கமேயாம். மேற்கூறிய விவ்வெல்லாக் கருத்துக்களு மினிது விளங்கவன்றோ, நமது சந்தான குரவர் சுவாமிகள்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகல் மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணநூல் படித்து
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேத சிரப்
பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்திய
பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என, இருபகுதிப்படக் கூறியதும். இச்சுருதியின் முற்பகுதி "சைவத்திறத்தடைவர்" என்பதனோடும், பிற்பகுதி "சிவனடியைச் சேர்வர்" என்பதனோடும் முடிந்துள்ளன. பிற்பகுதியிற் கூறியுள்ள நான்கு மார்க்கங்களே சிவனடியிற் சேர்க்கு மார்க்கங்களாம். அவைகளே சைவமார்க்கங்களாம். "பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாகப் பதி பசுபாசந் தெரிந்துப் பரசிவனைக் காட்டும், நன்மார்க்கம் நாலிவைதான்" என ஆசிரியர் கூறியதும் இவற்றையே. இதுபோலன்றி, முற்பகுதியிற் கூறியுள்ள மார்க்கங்கள், சிவனடியிற் சேர்க்காவாம். சைவ மார்க்கத்திலே சேர்ப்பதாம். இதுபற்றியே யிவைகள் யாவுஞ் சைவமார்க்கத்தினுக்குச் சோபான மார்க்கங்களாம். இச்சோபான மார்க்கங்களுள், வேத சிரப் பொருளை மிகத் தெளிதலாகிய வேதாந்த மார்க்கமும், ஒன்றேயாம். இம்மார்க்கமும் நேரிற் சிவனடியிற் சேர்க்குமார்க்கமன்று. இதனையுங் கடந்து அப்பாலுஞ் சென்றாரே, சைவமார்க்கத்தினை யடைவார்.

இக்கருத்துக் கொண்டே "வேதசிரப்பொருளை மிகத்தெ
ளிந்துஞ் சைவத்திறந்தடைவர்" எனக் கூறாது "வேத
சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறந்
தடைவர்" எனக் கூறியதும். இச்சுருதி கூறும் வேதாந்த
மார்க்கமும், போலிவேதாந்த மார்க்கமன்று. உபநிடதங்
கட்கு மயங்கிப் பொருள் கொள்வாருந், தம்மார்க்கந்தனை,
வேதாந்த மார்க்கமெனக் கூறுவர். அதுவன்றெனக் காட்
டுதற்கே, "வேதசிரப் பொருளை மிகத்தெளிந்தும்" எனக்
கூறியதும். இக்கருத்தினையே "வேதாந்தத் தெளிவாஞ்
சைவ சித்தாந்தம்" என்றார் மற்றொரு சந்தானாசாரிய
சுவாமிகளும்.

இச்சைவ மார்க்கமும் ஒரே மார்க்கமாய் நில்லாது நா
ன்கு வேறு மார்க்கங்களாய் நிற்பதேன். வாரணாசியிலெழு
ந்தருளியிருக்கும் விசுவேசரை யடையச் செல்வானுக்கு,
அவ்வாரணாசி சேருமார்க்க மொன்று, அதனினின்றும்,
அவ்விசுவேசர் ஆலயஞ் சேரு மார்க்க மொன்று, அப்பால்
அவர்சந்நிதிசேருமார்க்கமொன்று, அதன்பின்னர் அவனடி
யைச் சேருமார்க்க மொன்று, ஆகநான்குவேறு மார்க்கங்க
ளுளவாம். அதுபோல, சிவப்பொருளை யடைவானுக்கும்
சிவனுலகிற் சேர்க்கு மார்க்கமாகிய சரியை மார்க்கமொ
ன்று, அவனருகிற் சேர்க்கு மார்க்கமாகிய கிரியை மார்க்க
மொன்று, அவனுருவிற் சேர்க்கு மார்க்கமாகிய யோகமார்
க்க மொன்று அவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞான
மார்க்க மொன்று, ஆகநான்கு மார்க்கங்களுளவாம். இவை

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகல் மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணநூல் படித்து
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேத சிரப்
பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்திய
பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என, இருபகுதிப்படக் கூறியதும். இச்சுருதியின் முற்பகுதி "சைவத்திறத்தடைவர்" என்பதனோடும், பிற்பகுதி "சிவனடியைச் சேர்வர்" என்பதனோடும் முடிந்துள்ளன. பிற்பகுதியிற் கூறியுள்ள நான்கு மார்க்கங்களே சிவனடியிற் சேர்க்கு மார்க்கங்களாம். அவைகளே சைவமார்க்கங்களாம். "பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாகப் பதி பசுபாசந் தெரிந்துப் பரசிவனைக் காட்டும், நன்மார்க்கம் நாலிவைதான்" என ஆசிரியர் கூறியதும் இவற்றையே. இதுபோலன்றி, முற்பகுதியிற் கூறியுள்ள மார்க்கங்கள், சிவனடியிற் சேர்க்காவாம். சைவ மார்க்கத்திலே சேர்ப்பதாம். இதுபற்றியே யிவைகள் யாவுஞ் சைவமார்க்கத்தினுக்குச் சோபான மார்க்கங்களாம். இச்சோபான மார்க்கங்களுள், வேத சிரப்பொருளை மிகத் தெளிதலாகிய வேதாந்த மார்க்கமும், ஒன்றேயாம். இம்மார்க்கமும் நேரிற் சிவனடியிற் சேர்க்குமார்க்கமன்று. இதனையுங் கடந்து அப்பாலுஞ் சென்றாரே, சைவமார்க்கத்தினை யடைவார்.

இக்கருத்துக் கொண்டே "வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சைவத்திறத்தடைவர்" எனக் கூறாது "வேதசிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறத்தடைவர்" எனக் கூறியதும். இச்சுருதி கூறும் வேதாந்த மார்க்கமும், போலிவேதாந்த மார்க்கமன்று. உபநிடதங்கட்கு மயங்கிப் பொருள் கொள்வாருந், தம்மார்க்கத்தினை, வேதாந்த மார்க்கமெனக் கூறுவர். அதுவன்றெனக் காட்டுதற்கே, "வேதசிரப் பொருளை மிகத்தெளிந்தும்" எனக் கூறியதும். இக்கருத்தினையே "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தம்" என்றார் மற்றொரு சந்தானாசாரிய சுவாமிகளும்.

இச்சைவ மார்க்கமும் ஒரே மார்க்கமாய் நில்லாது நான்கு வேறு மார்க்கங்களாய் நிற்பதேன். வாரணாசியிலெழுந்தருளியிருக்கும் விசுவேசரை யடையச் செல்வானுக்கு, அவ்வாரணாசி சேருமார்க்க மொன்று, அதனினின்றும், அவ்விசுவேசர் ஆலயஞ் சேரு மார்க்க மொன்று, அப்பால் அவர்சந்நிதிசேருமார்க்கமொன்று, அதன்பின்னர் அவரடியைச் சேருமார்க்க மொன்று, ஆகநான்குவேறு மார்க்கங்களுளவாம். அதுபோல, சிவப்பொருளை யடைவானுக்கும் சிவனுலகிற் சேர்க்கு மார்க்கமாகிய சரியை மார்க்கமொன்று, அவனருகிற் சேர்க்கு மார்க்கமாகிய கிரியை மார்க்கமொன்று, அவனுருவிற் சேர்க்கு மார்க்கமாகிய யோகமார்க்க மொன்று அவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞானமார்க்க மொன்று, ஆகநான்கு மார்க்கங்களுளவாம். இவை

கள் முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும். இவைகளிற் சிவனடியிற் சேர்க்கு மார்க்கமாகிய ஞானமார்க்க மொன்றே, நேரிற் சிவனடியிற் சேர்க்குமியல்பு பற்றிச் சன்மார்க்க மெனப்பட்டது. என்றாலும் ஏனை மார்க்கங்களும், சிவனுலகு சிவனுரு, சிவனுரு எனயாதானு மோர்விதத்திற்சிவத்தின்பாலே சேர்க்கும், அன்றி வேறொரு பொருளின்பாற் சேர்க்கா. ஆகலால், அவை மூன்றும், சிவமார்க்கம், அல்லது சன்மார்க்க மெனவும் படும்.

"சரியை கிரியாயோக சாதனம் விடுத்தவெல்லாஞ்
சன்மார்க்கமல்ல" என்றார் நமது தாயுமான சுவாமி

களும். இந்நான்கு மார்க்கங்களையும், எடுத்து விளக்கும் முதனூல்கள், சிவாகமங்களே யாதலால், இவையாவும்பொதுவாய்ச் சைவமார்க்கமென நிற்கும். இச்சைவமார்க்கமுற்றுஞ் சன்மார்க்கமேயென நமது தாயுமான சுவாமிகள்

"சந்தான கற்பகம் போலருளைக் காட்டுந் தக்கநெறி
யிந்நெறியேதான் சன்மார்க்கம்" என்றருளிச் செய்

தனர்.

இந்நான்கு மார்க்கங்களும், தனித்தனி கொண்டு சேர்ப்பது, வெவ்வேறு பதங்க ளென்று கூறினோம். அவற்றின் தனித்தனியியல் பெல்லை யென ஆலோசிப்பாம். அவைகள் நான்கும், சிவப்பொருளை நோக்கிச் செய்யும் வழிபாடேயாம். 'வழிபாடு' எனினும், 'மார்க்கத்திற்செல்லுதல்' எனினும், ஒன்றே. சைவத்திறந்தலைநின்றார் அ

சிவப்பொருளை யன்றி வேறு பொருளை வழிபடார். அப்பொருளொன்றே வழிபடுதற் குரிய பொருளெனத் தெரிந்தே, சைவத்திறத்தடைவார். அடைந்து, அதன்படி யொழுகிப் பக்குவ முதிர்ச்சி யடைந்த பின்னரே, சிவப்பொருள், இன்ன தன்மைத் தென வுணர்வார். அதுகாறும், அப்பொருளின், உருவம், அருவுருவம், அருவம், ஆகிய மூவகை வடிவங்களி லொன்றொன் றினையே, யப்பொருளென வுணர்ந்து வழிபடுவார். சரியையினின்றோர், அப்பொருளினுருவ வடிவத்தையே யஃதென வுணர்ந்து அகத்தொழிலால் வழிபடுவார். கிரியையினின்றோர், அவ்வுருவ வடிவத்தினுஞ்சூக்கும வடிவமாகிய அருவுருவ வடிவத்தையே சிவப்பொருளென வுணர்ந்து, அகத்தொழிலானும்புறத்தொழிலானும்வழிபடுவார். இவர்க்கு புறத் தொழிலால், உருவவழிபாடுமுண்டு. யோகத்தினின்றோர், அவ்வுருவவடிவத்தினுஞ்சூக்கும வடிவமாகிய, அருவ வடிவத்தையே சிவப் பொருளென வுணர்ந்து, அகத்தொழிலால் வழிபடுவார். இவர்க்கு முற்கூறிய இருவகைவழிபாடுகளு முண்டு. ஞானத்தினின்றோரோ, மேற்கூறிய மூன்று வடிவங்களுஞ் சிவப்பொருளல்ல, அதன் வடிவங்களே யெனத் தெரிந்து, அதனையுள்ளபடி யுணர்ந்து, அறிவுத் தொழிலால் வழிபடுவார். இவர்க்கு முற்கூறிய மூவகை வழிபாடுகளு முண்டு. அன்றியும், சைவமார்க்கத்தி லொழுகுபவர், அதன்படி யொழுகுமுன்னரே, சிவப்பொருள், நமக்கருள் புரியு மாற்றையுணர்வாரு மல்லர், அப்பொருள், உயிர்கட்கு, ஆண்டானாயும், பிதாவாயும், தோழனாயும், அவைகளேயாயும், இக்

நால்வகையாயும் நின்றருளுந் திறத்தை, யிச்சைவமார்க்கத்திலொழுகிவரவே, ஒவ்வொன்ருயுணர்வாராவர். புறத்தொழிலால் மாத்திரம் வழிபடுஞ் சரியையாளர், முதல்வன், தமக்கு ஆண்டாளுய் நின்று அருளுதலை மாத்திர முணர்ந்து வழிபடுவார் அதுபற்றியே யிவரது மார்க்கம், தாச மார்க்க மெனப்பட்டது. அகத் தொழில் புறத்தொழில் களாலும் வழிபடுங் கிரியையாளர், அம்முதல்வன் தமக்குப் பிதாவாய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார் அதனுலேயே, அவரது மார்க்கம் புத்திர மார்க்கம் எனப்பட்டது. தனித்த அகத்தொழிலாலும் வழிபடும் யோகிகள், முதல்வன் தமக்குத் தோழனுய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார். இவரது மார்க்கமிதுபற்றியே சகமார்க்க மெனப்பட்டது. அறிவுத் தொழிலாலும் வழிபடும் ஞானியோ, முதல்வன் தானேயாய் நின்றருளுதலையு முணர்ந்து வழிபடுவார் இக்காரணத்தானே, இவரது மார்க்கம், சன்மார்க்க மென விளங்குகிறது, என்பவே, இந்நான்கு மார்க்கங்களும், முறையே ஒன்றற் கொன்றேற்றம் ஒன்றற் கொன்று சோபானமுமாம்.

ஆனல், மேற்கூறிய நான்கு மார்க்கங்களும், ஒன்றற் கொன்றன்னியமோவெனின், அல்ல. சிவப்பொருளினுருவ வழிபாடு, அதன் அருவுருவ வழிபாட்டிலும், அவ்விரண்டும், அதன் அருவ வழிபாட்டிலும், அம்மூன்றும் அதன் உண்மை வழிபாட்டிலும், உண்டெனக் கூறினேம். அன்றியும், இச்சரியையாதி வழிபாடுகள், முறையே, ஒன்று முற்றி மற்றென்ருய் மாறாத நகைகமைந்து. அரும்பு

முற்றி மலராம், மலர் முற்றிக்காயாம். காய்முற்றிக் கனியாம். அதுபோல், சரியை முற்றிக் கிரியையாம், கிரியை முற்றி யோகமாம், யோகமுற்றி ஞானமாம். அதாவது ஒரேபொருள் ஓரே நிலையில் அரும்பெனவும், மற்றொரு நிலையில் மலரெனவும், பிறிதோர் நிலையிற்கா யெனவும், மற்றுமோர் நிலையிற் கனியெனவுங் கூறப்படும். அதுபோல் ஒரே மார்க்கம், நிலை வேறுபாட்டால், சரியையெனவும், கிரியையெவும் யோகமெனவும் ஞானமெனவும், நான்கு திறப்பட நிற்கும். இதனையே நமது தாயுமானசுவாமிகளும்.

"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோலன்றே பராபரமே"

என்று விளக்கியருளினர். 'திருக்கோயில் அலகிடல்' முதலிய சரியை கிருத்தியம் அத்துவித ஞானத்தை யெவ்வாறு தருவதாகும் என மலைவார் சிலர். எதுபோ லெனில், மாவரும்பு, மாங்கனி, யிவ்விரண்டினையு முன்னர் பார்த்திராத ஒருவன், இவ்விரண்டினையும், உற்று நோக்கி இவற்றில், கந்தம், உருவம், ரசம், இவற்றுள் யாதானு மொன்றில் ஒற்றுமையில்லையே, இவ்வரும்பு இக்கனியாய் மாறுதல் எவ்வாறு கூடும் எனமலைதல் போலாம். என்றாலும், இவ்விரண்டினையுந் தெரிந்துள்ளான், இவ்வரும்பு இக்கனியாய் மாறினதிற் சந்தேகமில்லை யெனத்தெளிவான். அதுபோல சரியையாதிமார்க்கங்களை யுள்ளபடி யுணர்ந்தார்க்கு, இச்சரியை கிருத்தியம் ஞானத்தைப் பயக்கு மென்பதிற் சந்தேக மின்றாம். அன்றியும், கனியின்கண் காயும், காயின்

கண் மலரும், மலரின்கண் அரும்பு முளைவாபோல, ஞானிக்குச் சரியையாதி நான்கும். யோகிக்கு அதனுள் முதல் மூன்றும், கிரியாவானுக்குச் சரியை கிரியை யிரண்டு முரித்தாம்.

"ஞானயோகக் கிரியா சரியைநாலும் நாதன்றன்பணி
ஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்குமுரியன்யோகிக்
கிரியாவானென் கிரியையாதி
யானவிரண்டினுக் குரியன் சரியை யினின்றோனச்
சரியைக்கே யுரியன்"

என்ற சிவஞான சித்தித்திருவிருத்தமு மிக்கருத்தையே விளக்கிற்று. என்றால் ஞானிக்குச் சிவாலய தரிசன முதலியன வேண்டப்படா வென்பது தவறாம். அவர் சரியையாதி நான்கு மார்க்கங்களிலும் நின்றே நாதன் பணியியற்றுவாராவர். அந்நால் வகைப்பணியுமே ஞானமார்க்கம், அவை. முற்றுமே சன்மார்க்கம்.

மேற்கூறிய நான்கு மார்க்கங்களிலும் நின்று சிவப்பொருளை யடைந்தார், மேலுஞ் செய்யக் கிடக்கும் பணி யென்பதுண்டா? உண்டேல், எற்றுக்கு? சிவப்பொருளை யடைந்தார், ஆண்டு நிலைபெற்று நிற்கவும் வேண்டும். அங்ஙனம் நிலைபெறுதலே, கலத்தல், அடிசார்தல், அல்லது முத்தி யெனப்படும். ஜீவர்கள் தம்மறிவிச்சை செயல்கள் முழுதினையுஞ் சிவத்தின் பாணிறுத்துதலே, சிவத்தோடு கலத்தலாகும்.

"தொண்டரொற்றுமையுமில்லைதோலனாதுடையுமில்லை
கண்டலாதருளுமில்லைக் கலந்தபின் பிரிவதில்லை"

எனத் தமிழ்வேதங் கூறுவது மிக்கலப்பினையே. இவ்வாறு சிவத்தோடு கலந்ததன்றி, பதத்தோடு சேர்ந்து மாத்திர முள்ளார், அதனினின்று நீளப்பிரியவரே யாவர். சித்தாந்த மகாவாக்கிய மாகிய பஞ்சாக்கர மந்திரத்தை விதிப்படியுச் சரித்தலே, யவ்வாறு கலத்தற்குபாயமாம். வேதாந்த மகா வாக்கியம் பொதுப்படவுணர்த்தும் பொருளையே, யிம்மகா வாக்கியஞ் சிறப்பினதா யுணர்த்தும். அம்மந்திரத்தின் பொருள் "அது நான் ஆகுன்" என்பது. இம்மந்திரத்தின் பொருள், "சிவத்தை நமஸ்கரிக்கின்றேன்" என்பது. அம் மந்திரத்தில் "அது" என்பதாற் பொதுவா யுணர்த்தப் பட்ட பொருள் யாது என ஆசங்கிப்பார்க்கு, அது சிவமே யென விம்மந்திரஞ் சிறப்பித்துக் கூறும். அம்மந்திரம் "நான் ஆதல்" எனப் பொதுப்படக் கூறியதை, எவ்வா றாதல்? என ஆசங்கிப்பார்க்கு, 'இறைபணி நிற்றல்', அதா வது "நமஸ்கரித்தலே' 'நான் ஆதல்' என, இம்மந்திரஞ் சிறப்பித்துக் காட்டும். வேதத்திற்குச் சிவாகமம், சிறப்பா தல்போல, வேதமஹா மந்திரமாகிய வேதாந்த மகாவாக்கி யத்திற்கும், சிவாகம மஹா மந்திரமாகிய சித்தாந்த மகா வாக்கியமுஞ் சிறப்பினதாய் விளங்கும். இம்மந்திரம், "ஏகனாகியிறை பணி நிற்றலே" யுணர்த்தும். இஃதுணர் த்தியபடி, தான் சிவப் பொருளின்பால், கசிந்த தொண்டி னோடு நின்று, அதாவது, தனதறிவிச்சை செயல்களியாவும் அப்பொருளின்பாலே ஒருப்பட நின்று, தானுஞ் சிவமும்

ஆண்டானடிமைத் திறமாய் நிற்பதை, இம்மந்திரம் ஓது முறையில் வைத்துச் சுத்தமானதாய் உச்சரித்து நிற்றல் வேண்டும். இம்மந்திரத்தை யிவ்வாறோதலே, சிவப்பொருளைச் சார்ந்தார் அதனோடு கலத்தற்கு நெறியாம் என நமது ஆசாரிய சுவாமிகளும்.

"முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே
யந்நெறியே சென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே"

என இதன் றலைப்புச் சுருதியிற் கூறினார்.

இதுகாறுங் கூறிய பரம்பொருளாகிய சிவப்பொருளோடு ஜீவர்களைக் கூட்டுவிக்கு மார்க்கம், இச்சைவமார்க்கமே. அச்சிவப்பொருளோடு ஜீவர்களைக் கலப்பித்து அதனோடு நிலை நிறுத்து மார்க்கமுமிதுவே. எல்லா மார்க்கங்களுந் தன்பால் முடிவுபெற நிற்குஞ் சித்தாந்த மார்க்கமும் இதுவே. இம்மார்க்கமன்றோ இந்திராதி தேவர்கட்கும், மற்றும் அசுரர்கள், இருஷிகள், முனிவர்கள், சித்தர்கட்கும், தாரகமாயுள்ள மார்க்கம்.

"அந்தோ ஈததிசய மிச்சமயம் போலின்றறிஞரெலாம்
நடுவறிய வணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்தி
ருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்திராதிபோக நலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாரகம் வேறில்லை யில்லை"

என்று புகழ்தற்குரியது மிம்மார்க்கமே. இம்மார்க்கத்தை

வளர்ந்தற்கன்றே யிவ்வுலகிற் பல்லூழிகாலந் தொட்டுப் பலவரசர்கள், பலகோடித் திரவியங்கள் செலவு செய்து, பல சிவாலயங்களமைத்ததும், அவற்றிற்குப் பல பூஸ்திதி களளித்ததும். இம்மார்க்க போதகத்திற்காக வன்றே, பல சைவாதீனங்கட்கு ஏராளமான நிதிகள், பல வேந்தர் களாலும் பிரபுக்களாலும், அளிக்கப்பட்டன. ஜன்மம் ஒன் றிலே தானே, ஜீவன் முத்தனுக்கி, ஞான முதிர்ப்பித்துப் பிறப்பை யறுத்துப் பேரானந்த முத்தியாலுஞ் சேர்க்கு மார்க்க மிதுவே. இம்மார்க்கத்தினையே நமது சந்தான குரவர் சுவாமிகள்,

"சித்தாந்தத்தே சிவன்றன்றிருக்கடைக்கண் சேர்த்திச்
 செனன மொன்றிலே சீவன் முத்தனுக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம்
 பொழிந்து வரும்பிறப்பை யறுத்து,
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பனென்று மொழிந்
 திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப் பெருங்
 குழியில் வீழ்ந்திடுவரிது வென்னபிராந்தி"

எனச் சித்தாந்த நெறி நின்றுயர்வும், அதனை நிந்தித் துப் பிதற்றினர் தாழ்வுமுடன் கூறினர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த, இச்சன்மார்க்கத்தின் தற்கால நிலைமையை யென் சொல்ல! அந்தோ பரிதாபம்! சைவம், இன்னதென உணர்ந்தார், ஒரு சிலரே. அதற்கு முதனூல்கள் யாவையென உணர்ந்தார், அதினுஞ் சிலரே. அம்முதனூல்களாகிய சிவாகமங்களிலெல்லாவகள் தாமுள?

அவைகளும் யாண்டுள? என்றுணர்ந்தார் ஒருவருமே யில்லை. அந்நூல்களி லொன்றையேனும் முற்றும்படித்தாருளரோ, என்பது பெருஞ் சந்தேகம். சைவம், சூத்திரர் சமய மென்பார் சிலர். இவர், சைவ சாத்திரங்கள், பத்திரவ் இவற்றின் பெரும் பாகத்தை யியற்றினர் பிராமணோத்தமரே யென்பதை யறியார். சைவம், தமிழ்ச்சமய மென்பார் சிலர். சைவமுதனூல்களும், மற்றும் அனேக சைவக் கிரந்தங்களும், வடமொழியாலேயே யுள்ளனவென்பதை யறியார். சைவம் அவைதிக மென்பார் சிலர். சிவாகமங்களைப்போல, வேதங்களையுஞ் சைவம், முதனூல்களாகக் கொள்ளு மென்பதையும், அவ்விரண்டிற்கும், ஒன்றோ டொன்று முரணாது தாற்பரியங் கூறுவது சைவமே யென்பதையு முணரார். சைவம், துவைதமே யென்பார் சிலர். அத்துவித ஞானத்தை யுள்ளபடி யுணர்த்துவது சைவ மொன்றே யென்பதையுமுணரார். இம்மார்க்கத்தை யுள்ளபடி யுள்ளபடி யுணர்த்துவாரின்மையா னன்றோ, இதன் கதியிவ்வாறாகியது. இதனை விளக்குதற்கென்றே யேற்பட்டுப் பெரு நிதிகளு மளிக்கப்பெற்ற சைவாதீனங்களிற் பல, பயனிலவாய்ப் போயின. அவ்வாதீன கர்த்தர்கள், தம்மா தீன நோக்கங்களையு மரபுகளையுந் தமக்கிசைந்தவாறெல்லா மாற்றிக்கொண்டார்கள். அன்னதானத்தை முற்றுங் கைவிட்டனர். துரைமார்கட்குத் தீனி முதலியன வளிக்கத் துணிந்தனர். சன்மார்க்கபோதக மென்பதை யற வொழித்தனர், துன்மார்க்கத்திலே தலைப்பட்டு நின்றனர். வேஷமாத்திரமே யுடையார். அதுவும் அல்லும்

பகலு மென்பது சந்தேகம். இவ்வாதீனங்கள் மட்டுமோ? அநேக சிவாலயங்களும், அவற்றின் நிதிகளும், இவர்கள் கையிற் சிக்கின. அவ்வாலயபூஜைகளும் முட்டின. விழாக்களும் நின்றன. அவ்வாலய நிதிகள் இவர்கள் கடன்களுக்கிலக்காயின. இவர்களாலன்றோ, இம்மார்க்க மிக்கதியினை யடையலாயிற்று.

நமது சைவ சன்மார்க்கம், இவ்வாறு சீர்குலைந்து நிற்க யார்தான் சகிப்பார். பண்டைக்காலத்திற் பலசமய குரவர்கள் முதலியோர், நமது சன்மார்க்கத்தை வளர்த்தெடுத்து ஆதரித்தும் வந்தனர். இக்காலத்திலும் பல சைவாபிமானிகள், பலவிடங்களினின்றுங் கிளம்பி வெளிவந்து, நமது சைவ மார்க்கத்தைப் பேணி யாதரிப்பாராயினர். இச்சன்மார்க்க பரிபாலனத்திற்கென்றே, பல விடங்களிலும் பல சபைகள் ஏற்பட்டுள்ளன. பல புத்தக சாலைகளும், அமையப் பெற்றன, பல பத்திரிகைகளும் வெளி வந்தன. பல அச்சியந்திரங்களும் தாபிக்கப்பட்டன. பிரதி வருஷமும், இதுபோலொத்த பல கூட்டங்கள் கூடி, இச்சன்மார்க்க சம்பாஷணைகளும் பிரசங்கங்களும், நடைபெறுகின்றன. அக்கூட்டங்களை நமது அக்கிராசனாதிபதி போன்ற பல வேந்தர்களும், பிரபுக்களும், முன்னின்று நடத்துவாராயினர். சென்ற ஆறுமாதங்கட் குள்ளாக, சிதம்பரம் தூத்துக்குடி, இராமநாதபுரம், செவ்வலைப்பட்டி, கூடலூர் முதலிய விடங்களில் இதுபோலொத்த பெருங்கூட்டங்கள் கூடி, இச்சன்மார்க்கத்தை விளக்குவாராயினர். இம்மார்க்கத்தினைச் சைவரேயன்றி, ஏனையோரு மாராய்ச்சி செய்ய

வெண்ணினர். இத்தேசத்தவர் மாத்திரமன்றி, அமெரிக்கா முதலிய தேசத்தவருள், கனம் பெல்ஸ் முதலிய பெரியோர்களும், ஆராய்ச்சி செய்யப் புகுந்தனர். நமது சைவாதீன கர்த்தர்களும், தமது ஆதீனங்களைச் சீர்திருத்திக் கொள்ளு மார்க்கத்தைச் சிந்திப்பாராயினர். நாம் நேற்றுக் கூடிய நிர்வாக மகா சபையில் இச்சீர் திருத்தங்கட்கென்றே, ஓர் தீர்மானமுஞ்செய்து, அதைநிறைவேற்றுவதற்கு, ஒரு சபைக் கூட்டமும் ஏற்படுத்தலாயினோம். நமது இராஜாங்கத்தாரும், இச்சீர் திருத்தங்களை நோக்குவராயினர். இவ்வாதீன சம்ரக்ஷணைக் கனுகூலமான பல தீர்ப்புகளும், உயர்ந்த நியாயஸ்தலங்களினின்றும் பிறந்துள்ளன. இத்தருணத்தில் நம்மவர்களெல்லாமொன்று சேர்ந்து ஒரே மனதுடையராய் நமது சன்மார்க்க பரிபாலனத்திற் சிறிது நாட்டம்வைப்போமேல், இம்மார்க்கம் அதன் பூர்வ நிலையை யடைந்து, "மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்திராஜாங்கத்தி லமர்ந்தது வைதீக சைவம், அழகிதந்தோ" என அழகில் நிற்கு மென்பதிற் சந்தேக மில்லை. அவ்விதங் கூட்டுவிக்க நாமெல்லாருந் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

"வைய நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிருநீறு சிறக்கவே".

திருச்சிற்றம்பலம்.